# யாழ்ப்பாண மாவட்ட மக்களின் இடப்பெயர்வு

கா. குகபாலன்

யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் வடபகுதியில் 964.5 சதுர மைல்[1] பரப்பினைக் கொண்டிருக்கின்றது. புவியியல் ரீதியாக இம்மாவட்டத்தை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.[2] வடமேற்கேயுள்ள தீவுத் தொகுதிகள், குடாநாட்டுப்பகுதி, தாய்நிலப்பகுதி என்பனவே அவையாகும். இப்பிரிவுகள் பௌதிக ரீதியாக வேறுபட்ட பண்பினைக் கொண்டிருப்பதுடன் பண்பாட்டு ரீதியிலும் இது ஓரளவுக்கு பிரதிபலித்திருப்பதை உணரமுடிகின்றது. இப் பிரதேசங்களிடையே சமூக, பொருளாதார ரீதியில் பெரியளவான மாற்றங்களைக் கொண்டிருக்காதுவிடினும் பிரித்தாராய்வதில் எவ்வித கஷ்டமும் இருக்கமுடியாது. மேலும், இம்மாவட்டத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் இலங்கைத்தமிழர்களே அதிகமாகவுள்ளனர். இவர்களுக்கு சமூக பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியில் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழுகின்ற மக்களிலும்பார்க்க வேறுபட்ட பண்புகள் இருப்பதைத் தெளிவாகக் காணமுடிகின்றது. வரலாற்று ரீதியாக இம்மாவட்ட மக்களுக்கிருந்த முக்கியத்துவம் சுதந்திரத்தை அடுத்து குறைவடைந்துவரினும் தங்களது முயற்சி, திடமனப்பான்மை ஆகியனவற்றால் தங்களை மேல்நிலைக்குக் கொண்டுவர முயல்கின்றனர் எனலாம். இவ்வாறான பண்புகளைக் கொண்டுள்ள இம்மாவட்ட மக்கள் இம்மாவட்டத்திற்குள்ளும், மாவட்டத்துக்கு வெளியிலும், சர்வதேச ரீதியாகவும் இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். இந் நிகழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதேபோல வெளி மாவட்டங்களில் வாழும் மக்கள் இம்மாவட்டத்திற்குள் இடப்பெயர்வினை சிறியளவில் மேற்கொள்கின்றனர். இடப்பெயர்வினை வரலாற்று ரீதியாக முன்னோக்கிப் பார்த்தல், தரவுகள் ரீதியாக அறிதல், இடப்பெயர்வினால் ஏற்பட்டுவரும் சமூக, பொருளாதார கலாசார மாற்றங்களை அறிதல் ஆகியன இவ்வாய்வில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ் வாய்வுக்கு அவசியமான இடப்பெயர்வுபற்றிய கோட்பாடுகள், தேறிய இடப்பெயர்வினைக் கண்டுகொள்வதற்கான வழிமுறைகள் போன்றனவும் விளக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகை வளர்ச்சிபற்றி அறிதல் மிக அவசியமாகும். 1981 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் 6 வீதத்தினர் இங்கு வாழ்கின்றனர். 1871 — 1981 ஆம் ஆண்டுவரையும் 12 குடித்தொகைக் கணிப்புக்கள் நாட்டில் பெறப்பட்டுள்ளன. இவை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை[3] மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அட்டவணை I இல்1871—1981 வரையிலான குடித்தொகை வேறுபாடு, வளர்ச்சிவீதம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை I

யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகை வளர்ச்சி 1871 — 1981

| ஆண்டு | மொத்தக் குடித்தொகை | இடைக்கால அதிகரிப்பு | இடைக்கால அதிகரிப்பு வீதம் | வருட வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1871 | 246,063 | ——— | —— | —— |
| 1881 | 265,583 | 19520 | 7·9 | 0·79 |
| 1891 | 279,284 | 13701 | 5·2 | 0·52 |
| 1901 | 300,851 | 21567 | 7·7 | 0·77 |
| 1911 | 326,712 | 25861 | 8·6 | 0·86 |
| 1921 | 330,541 | 3829 | 1·2 | 0·12 |
| 1931 | 355,425 | 24884 | 7·5 | 0·75 |
| 1946 | 424,788 | 69363 | 19·5 | 1·3 |
| 1953 | 491,849 | 67061 | 15·8 | 2·26 |
| 1963 | 612,596 | 120,747 | 24·5 | 2·45 |
| 1971 | 704,350 | 91754 | 15·0 | 1·9 |
| 1981 | 831,112 | 73238 | 10·4 | 1·4 |

மூலம் :— இலங்கைக் குடித்தொகைக் கணிப்பு அறிக்கைகள் 1871 — 1981

இம் மாவட்டத்தின் வளர்ச்சிப்போக்குபற்றி ஆராய்வதன் முக்கிய நோக்கம், வளர்ச்சிப்போக்குக்கும் இடப்பெயர்வுக்குமிடையில் தொடர்பு உண்டா என்பதை அறிவதற்கேயாகும். இம் மாவட்டத்தின் குடித்தொகை வளர்ச்சிப் போக்கினை நான்கு காலகட்டங்களாக வகைப்படுத்த முடியும். அவை : I. 1871 – 1911, II. 1911 – 1821, III. 1921 – 1963, IV. 1963 – 1981ஆகும். முதலாவது கட்டம் குடித்தொகை வளர்ச்சி 1% க்குக் குறைந்ததாகும். இறப்புகளும், பிறப்புகளும் அதிகமாக இடம்பெற்றிருக்கின்றன. வெளிஇடப்பெயர்வு பெரியளவில் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. இரண்டாவது காலகட்டத்தில் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இது இம்மாவட்டத்திற்கு மட்டுமே உரித்தானது எனக்கூறமுடியாது. இலங்கையில் மட்டுமல்ல தென்ஆசியநாடுகளிலும் காணப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் – 0·31 வீதமாக, அதாவது குடித்தொகை வீழ்ச்சி காணப்பட்டிருக்கின்றது. கொள்ளை நோயின் காரணமாக 12 மில்லியன் மக்கள் 10 ஆண்டுகளில் இறந்துள்ளனர்.4 1921 – 1963 காலப்பகுதியில் குடித்தொகை படிப்படியாக வளர்ச்சியடைந்துகொண்டு சென்றுள்ளது. 1911 – 1921 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்றிருந்த நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதனல் வளர்ச்சிவீதம் அதிகரிக்க வாய்ப்பிருந்தது. 1940 களில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் சுகாதார மருத்துவ வசதிகளின் விஸ்தரிப்புக்கள் அரச மானியங்கள் இறப்பினைக் கட்டுப்படுத்தியதாலும் பிறப்புகளில் பெருமளவு மாற்றம் காணப்படாமையினாலும் இம் மாவட்டம் 1946 – 1963 காலத்தில் விரைவான வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் வெளியிடப் பெயர்வினைத் தூண்டியபோதும், குடாநாட்டுப் பகுதிகளிலிருந்து மாவட்டத்தின் தாய் நிலப்பகுதிகளுக்கே

அதிகளவு இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறன. 1963 – 1981 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் படிப்படியாக வளர்ச்சிவீதம் குறைவடைந்து செல்கின்றது. கல்வி அறிவு, பொருளாதாரப் பிரச்சனைகள், விவாகவயது பின்தள்ளப்பட்டமை, குடும்பக்கட்டுப்பாட்டின் தீவிர பிரசாரம் போன்றனவும் வெளி இடப்பெயர்வில் அதிக கவனம் செலுத்தியமையும் வளர்ச்சி வீதம் படிப்படியாகக் குறைவடைந்து செல்வதற்குக் காரணங்களாகும். எனவே குடித்தொகை வளர்ச்சிக்கும் இடப்பெயர்வுக்குமிடையேயுள்ள தொடர்பினை 1950 களிலிருந்தே அறிந்துகொள்ளக்கூடியதாக விருப்பதனால் தரவு ரீதியிலான ஆய்வு 1953 - 1981 வரையும் மேற்கொள்ளப்படுகின்றது.

குடித்தொகை மாற்றத்தில் இடப்பெயர்வு மூன்றாவது அங்கமாகவுள்ளது. கருவளம், இறப்பு என்பனவே முதலிரண்டாகும். இவை உயிரியல் ரீதியானதாக (Biological Variable) விருக்க, இடப்பெயர்வானது மனிதனது விருப்பு வெறுப்புக்களின்பாற்பட்டதாக, அவனின் தீர்மானத்துக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.[5] தான் வாழும் பிரதேசம் தனக்கு ஏதோ வகையில் ஒத்துவராதபோது தனது இருப்பிடத்தை மாற்றிக் கொள்ள முனைகின்றான். இந் நிகழ்ச்சி சமூக பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் பௌதிக ரீதியிலான மாற்றங்களுக்குட்பட்டு நடைபெறுகின்றன.[6] இடப்பெயர்வு பற்றி விளக்கமுனைந்த பல அறிஞர்கள் பல்வேறு வித கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். விஞ்ஞான ரீதியிலான இடப்பெயர்வு, இடப்பெயர்வாளனின் பொருளாதார அபிவிருத்தியில்தான் தங்கியுள்ளது என கொக்ஸ்[7] கருதுகிறார். இடப்பெயர்வுள் குடித்தொகையின் மீள்பரம்பலில் அதிக கவனம் செலுத்துவதுடன், பல்வேறு வகையில் மனிதவலுவை ஒழுங்குபடுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றது எனவும் தனிப்பட்டவர்களின் வாழ்வில் இது கூட்டுமொத்தமான மாற்றத்தினையும் அதனை அவன் எப்படி சமாளிக்கின்றான் என்பதையும் விளக்குகின்றது என Beijer என்பவர் கருதுகின்றார்.[8]

இடப்பெயர்வினை சர்வதேச இடப்பெயர்வு, உள்நாட்டு இடப்பெயர்வு என இருபகுதிகளாகப் பிரித்து ஆராயலாம். இலங்கை ஏனைய நாடுகளுடன் பௌதிக ரீதியாகத் தொடர்பற்று இருப்பதனால் இலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் இடையிலான சட்டரீதியற்ற இடப்பெயர்வு இடம்பெறுவதில்லை. நாடு சுதந்திரமடைந்த பின்னர் வெளிநாடுகளிலிருந்து உள் இடப் பெயர்வுகளை ஏற்படுத்துபவர் விடயத்தில் மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்படுகின்றது. இதற்காக இலங்கை அரசு பல்வேறு சட்டங்களை யாத்துள்ளது. ஆனால் இலங்கையில் உள் இடப்பெயர்வானது எந்தவித தடையுமின்றி நாட்டின் எந்தப்பகுதிக்கும் இடப்பெயர்வினை ஏற்படுத்த முடியும். இலங்கை ஒரு சிறிய நாடாகவிருப்பதாலும், இனரீதியான குடித்தொகைப்பரம்பல் காணப்படுவதாலும், பொருளாதார ரீதியில் நாட்டு மக்களிடையே வேறுபட்ட தன்மை காணப்படுவதாலும் உள்நாட்டு இடப்பெயர்வும் அதன் தாக்கமும் முக்கியம் பெறுகின்றது எனலாம். யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பொருளியல் ரீதியாக வெளிஇடப் பெயர்வினை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாயினும் அண்மைக்காலத்தில் இவ் விடப்பெயர்வினால் ஏற்பட்ட பலாபலன்களை உணரத் தலைப்பட்டுள்ளனர்.

இடப்பெயர்வு பற்றி ஆராய்வது குடிப்புள்ளியியலாளர்களால் கூடிய கவனம் செலுத்தப்பட்டுவரினும் பொருளியலாளர்கள், சமூகவியலாளர், மானிடப் புவியியலாளர், அரசியல் விஞ்ஞானிகள், சட்டத்துறையினர், கொள்கை தயாரிப்பாளர், திட்டமிடுவோர், பொது நிர்வாகத்தினர், Social Pathologists, Social Phychologists போன்றவர்கள் இதன்பால் அதிக அக்கறைகொண்டிருக்கின்றனர். இலங்கைபோன்ற வளர்முகநாடுகளில் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கே இடப்பெயர்வு அதிகரித்து வருகின்றது. மேற்குறிப்பிட்ட துறையினர் தங்கள் துறைக்கும் இடப்பெயர்வுக்குமுள்ள தொடர்பினை அறிந்துகொள்கின்றனர். இவ்வாய்வு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதால் வாழ்ந்த இடம், வாழும் இடங்களில் அவர்கள் வகிக்கும் பங்குபற்றியதாக விடுகின்றது. அதாவது நான்கு நிலையங்களில் அறிந்து கொள்ளமுடியும்:

1. ஆரம்பத்தில் வாழ்ந்த இடத்தில் கொண்டிருந்த காரணிகள்
2. சென்றடையும் பிரதேசத்தில் கொண்டிருக்கும் காரணிகள்
3. இடையிட்ட தடை (Intervening obstacles)
4. தனிப்பட்ட காரணிகள் (Personal factors)

இவைதவிர சொந்த விருப்பத்தின் பேரில்செல்லாத இடப்பெயர்வுகளும் உண்டு. இத்தகைய இடப்பெயர்வு யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை அதிகம் இடம்பெறுவதில்லை. பெற்றோர் இடம்பெயரும்போது பிள்ளைகள் இடப்பெயர்வு ஏற்படுத்துவதும், கணவன் இடம்பெயரும்போது மனைவி தொடர்வதும் உண்டு. இதற்கு ஒன்றைஒன்று பின்தொடரும் இடப்பெயர்வு என (sequential migration) அழைப்பர். இத்தகைய இடப்பெயர்வு 1970 களுக்கு முன்னர் இம்மாவட்டத்திலிருந்து கணிசமான அளவு இடம்பெற்றிருக்கின்றது.

பொதுவாக ஒரு பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசங்களுக்கு தவிர்க்க முடியாத காரணங்கள் ஏற்படாதவிடத்து எல்லோரும் இடப்பெயர்வினை ஏற்படுத்தமாட்டார்கள். குறிப்பிட்ட சிலர்தான் இதனை மேற்கொள்கின்றனர். இதற்கு தள்ளுவிசை (Push Factor) இழுவிசை (Pull Factor) என்ற இருகாரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தள்ளுவிசையானது உயர்ந்த இயற்கையான குடித்தொகை வளர்ச்சியால் ஏற்படுகின்ற அமுக்கத்தால் வளம் குறைவடைதல், வெள்ளப்பெருக்கு, புவிநடுக்கம், வறுமை, சமூக, சமய, அரசியல் நிலைமை ஏற்றதல்லாமல் காணப்படும்போதும், வேறு பிரதேசம் பாதுகாப்பு என்று கருதும்போதும் நடைபெறும் மக்கள் நகர்வைக் குறித்து நிற்கும். இழுவிசை என்பது தான்வாழும் பிரதேசத்திலும் பார்க்க வேறுபிரதேசம் கவர்ச்சியாக அமையுமாயின் அப்பிரதேசம் சென்றடைதலைக் குறிக்கும். இத்தகைய காரணிகள் இருஇடங்களிலும் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் காரணிகளில் தாக்கத்தினை ஏற்படுத்தத் தவறுவதில்லை. குறிப்பாக கருவளம், இறப்பு, போன்றவற்றில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தி விடுகின்றன.

மேற்கூறப்பட்ட அடிப்படைக் காரணிகளை முன்வைத்து யாழ்ப்பாண மாவட்டத்தின் உள், வெளி இடப்பெயர்வுகளையும், (in migration, out migration) மாவட்டத்திற்குள் இடம்பெறும் உள் இடப்பெயர்வுகளையும் அறியலாம். சமூக, பொருளாதார, வரலாற்று, அரசியல் ரீதியாக ஏனைய

மாவட்டங்களோடு ஒப்பிடும்போது ஒற்றுமையிலும் வேறுபாடு கொண்டிருப்பதை மறுக்க முடியாது. வரலாற்றுக் காலத்தில் இந்தியாவிலிருந்து இம்மாவட்டத்திற்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் மக்கள் இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது. 10 ஆம் நூற்றூண்டு சோழர் எழுச்சியோடு இலங்கை சோழப் பேரரசுக்குட்பட்ட ஒரு பகுதியாக வந்தமையால் பல்வேறு இடங்களில் சிதறி வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் ஒன்றுசேர்ந்து வாழ்ந்திருக்கின்றனர் என அறியக்கூடியதாகவுள்ளது. கி. பி. 1365 ஆம் ஆண்டில் மதுரையை ஆண்ட இஸ்லாமியரைக் கலைத்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய குமார கம்பண்ணன் காலத்தில் உயர்பதவி வகித்த பலர் யாழ்ப்பாணம் வந்து குடியேறினர் எனவும் இவர்களைத் தொடர்ந்து இவர்களுக்கு உதவியாகப் பலர் இங்கு வந்தனர்[9] எனவும் அறியப்படுகின்றது. புவியியல் ரீதியாக யாழ்ப்பாண மாவட்டம் தென்னிந்தியாவுக்கு அண்மையில் இருப்பது இப்பிரதேசத்தைத் தேர்ந்தெடுப்பதில் முக்கியத்துவம் வகித்திருக்கலாம். 13 ஆம் நூற்றூண்டின் பின்னர் சிங்கள அரசுகளின் தலைமை நிலையம் அடிக்கடி மாற்றத்துக்குள்ளானது. இத்தகைய மாற்றம் மக்களையும் இடம்பெயரத் தூண்டியிருக்கும். தென் இந்தியப் படைஎடுப்பு, உள்நாட்டுப் போர்களால் விவசாய நிலங்கள், குளங்கள் அழிக்கப்படவே மலேரியா போன்ற நோய்களின் உக்கிரம் ஏனைய பௌதிகத் தாக்கங்கள் வடக்கு, கிழக்கு கரையோரப்பகுதிகளுக்கு இடம்பெயர வைத்திருக்கலாம்.[10] யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம்பெற முன்னர் தமிழர் குடியிருப்புகள் தாய்நிலப் பகுதிகளில் காணப்பட்டிருக்க வேண்டும் எனவும் திட்டமிட்ட அமைதியான தமிழருடைய குடியேற்றம் தமிழ் இராச்சியத்தின் தோற்றத்தின் பின்னரேயே வடபகுதியில் இடம்பெற்றுள்ளது எனவும் பேராசிரியர் இந்திரபாலா கருதுகிறுர்.[11] எனவே மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து வரலாற்றுக்காலத்தில் இம்மாவட்டம் வெளியிடப்பெயர்விலும் பார்க்க உள் இடப்பெயர்வினையே பெற்றுள்ளது எனலாம்.

மேலைத் தேசத்தவர் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து தரவுகள் ரீதியாக அறிய முடியாதுவிடினும், இம்மாவட்டத்திலிருந்து வெளியிடப் பெயர்வே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் நாகபட்டினம், மதுரை போன்ற இடங்களுக்கு பருத்தி ஏற்றுமதி செய்யும்பொருட்டு பூநகரி, மன்னுர் போன்ற இடங்களில் பருத்தி உற்பத்தியை மேற்கொள்ளக் குடாநாட்டுப் பகுதியில் குறிப்பாக தென்மராட்சியிலிருந்து மக்கள் சென்றுள்ளனர்.[12] ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நெல் உற்பத்தியின் முக்கியத்துவம்கருதி 10000 க்கு மேற்பட்டோர் அறுவடைக் காலங்களில் வன்னிக்குச் செல்வது வழக்கமாகும்.[13] இவர்கள் காலப்போக்கில் நிரந்தரமாகவே அப்பகுதிகளில் குடியிருப்பினை ஏற்படுத்தியிருக்கலாம். இவர்கள் ஆட்சியில் இந்தியாவிலிருந்து மக்கள் புடவை நெய்தல், சாயம்போடல் போன்ற தொழில்களை மேற்கொள்ள இம்மாவட்டத்திற்கு வந்துள்ளதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாடு ஒரு ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டதனுல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் வெளி மாவட்டங்களுக்கிடையில் உள் இடப்பெயர்வு, வெளி இடப்பெயர்வு இரண்டிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இக்காலத்தில் ஆங்கிலேய ஆட்சியின் நிர்வாகிகள் தமிழர்களின் திறமை, நேர்மை, முயற்சி என்பவற்

றில் பெருமதிப்புக்கொண்டு இலங்கையின் பெருந்தோட்டப்பகுதி, பொது வேலைப்பகுதி, புகையிரதப்பகுதி, நில அளவைப்பகுதி, கட்டிடப்பகுதி முதலிய பல திணைக்களங்களில் அதிக தமிழர்களைக் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களை நியமித்தனர்.[14] இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வி கற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புத்தேடி வெளி மாவட்டங்களை குறிப்பாக கொழும்பு, மலையகப் பகுதிகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டனர். ஆரம்பத்தில் தற்காலிக இடப்பெயர்வினை மேற்கொண்ட பலர் காலப்போக்கில் நிரந்தர வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். கொழும்பு நகரத்தில் இலங்கைத் தமிழர்களில் கணிசமானோர் இவ்வாறான இடப்பெயர்வினை ஏற்படுத்தியவர்களாவர். இவர்களில் குறிப்பிட்ட தொகையினர் சிங்கப்பூர், மலாயா போன்ற நாடுகளுக்கு, இங்கு கடமையாற்றி மாற்றலாகிச் சென்ற ஆங்கிலேய உயர் அதிகாரிகளின் நன்மதிப்போடு சென்றிருக்கின்றனர்.[15]

ஆங்கிலேயரின் வருகையினால் சுயதேவையினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பு மாற்றம்பெற்றது. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் அறிமுகத்தினால் இம்மாவட்டத்திலிருந்து குறிப்பாக மலையக மாவட்டங்களுக்கு வெளிஇடப்பெயர்வு ஏற்பட்டிருக்கின்றது. பெருந்தோட்ட நடவடிக்கையில் இந்தியத் தொழிலாளர் பங்கு அதிகமாகவிருந்தது. அவர்கள் தமிழர்களாக இருந்தபடியால் யாழ்ப்பாணமாவட்டத் தமிழர் குறிப்பாக ஆங்கிலம் கற்றவர்கள் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையில் தொடர்பு ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்தமையால் ஆங்கிலேயர் விரும்பியேற்றனர். அத்துடன் யாழ்ப்பாணம்–கொழும்பு புகையிரதசேவை 1906 ஆம் ஆண்டு தொடங்கியது. இதுவும் வெளியிடப் பெயர்வினைத் தூண்டிய காரணிகளில் ஒன்றாகும். இவைதவிர 1881 — 1891 ஆண்டுகளில் திருகோணமலையில் புகையிலைச் செழிப்பின் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு உள்இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர்.[16] கொழும்பு நகரவளர்ச்சியும் இம்மாவட்ட மக்களுக்கு இழுவிசையை ஏற்படுத்தியிருகின்றது. இக்காலப்பகுதிகளில் வர்த்தக நோக்கம் கருதி குறிப்பாகக் கொழும்பு மலையகப் பகுதிகளுக்கு சிறுதொகையினர் இடம்பெயர்ந்துள்ளனர்.

1930 களில் மலேயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வெளிநாட்டவர் உட்புகுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தபடியால் சர்வதேச இடப்பெயர்வு குறைவடைந்து மாவட்டத்திலிருந்து வெளிஇடப்பெயர்வு அதிகரித்தது. இக்காலப்பகுதியில் மாவட்டத்தின் குறிப்பாக குடாநாட்டின் இயற்கை வளப்பங்கீடு படிப்படியாகக் குறைவடைந்து செல்வது பலரால் சுட்டிக்காட்டப்பட்டது. குடாநாட்டுக்குடித்தொகை அழுக்கத்தைக் குறைக்கவேண்டுமாயின் தாய்நிலப்பகுதிகளுக்கு மக்களை நகர்த்தவேண்டும் என எண்ணினர். 1937ஆம் ஆண்டில் சங்குப்பிட்டி – பூநகரிப்பாலத்தினை அமைத்தால் குடாநாட்டிலிருந்து தாய்நிலப்பகுதியை அடைவது சுலபமாக இருக்கும் எனவும் இதன் மூலம் குடாநாட்டுக் குடித்தொகை அழுக்கத்தினைக் குறைக்கலாம் எனவும் மந்திரிசபையில் ஆலோசிக்கப்பட்டு உடனடியாக ஆரம்பிக்கப்படல்வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டது.[17] ஆனால் இன்றுவரை அது முற்றுப்பெறவில்லை.

1940 களில் இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் காணப்பட்ட மலேரியா இறப்பு டி. டி. ரி. யின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு

வரப்படவே அப்பிரதேசம் இழுவிசை கொண்டதாக மாறியது.18 அப்போதைய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை, நாட்டு மக்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது. *1950* களில் குடியேற்றத் திட்டங்கள் நிலமற்ற, வருமானம் குறைந்தவர்களை கவர்ந்திழுத்ததால் மாவட்டத்தின் தாய்நிலப் பகுதிகளுக்கும், தமிழர் பாரம்பரியமாக வாழும் பகுதிகளுக்கும் குடாநாட்டுப் பகுதிகளிலிருந்து வெளிஇடப்பெயர்வு கணிசமான அளவு மேற்கொள்ளப்பட்டது. உதாரணமாக நெடுந்தீவுக் கிராமத்தின் *1946* ஆம் ஆண்டுக் குடித்தொகை *6338* ப் பேராகும். இது *1981* ஆம் ஆண்டில் *5620* ஆகக் குறைந்துள்ளது. அதாவது தாய்நிலப்பகுதிக்கு ஏற்பட்ட இடப்பெயர்வினாலேயே இது சாத்தியப்பட்டது.

சுதந்திரத்தின் பின்னர் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட உள்நாட்டு இடப்பெயர்வுக்கு நேரடிக்காரணி, மறைமுகக்காரணி என்ற இரண்டும் தம் பங்கினை வகித்துள்ளது. நேரடிக் காரணிகளான, குடியேற்றத்திட்டங்கள், புதிய குடியிருப்புத்திட்டங்கள் ஆகியனவும் மறைமுகக் காரணிகளில் மலேரியா ஒழிப்பு, கிராம அபிவிருத்தி, நகர அபிவிருத்தி என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.19 இவை இம்மாவட்ட இடப்பெயர்விலும் கணிசமான பங்குவகித்துள்ளன. குறிப்பாக கிளிநொச்சி, வவுனியா நகர வளர்ச்சியால் குடாநாட்டிலிருந்து பலர் அங்கு சேவை நிலையங்கள் நிறுவ வாய்ப்பளித்தன. கொழும்பு நகரத்தின் துரித வளர்ச்சியும் யாழ்மாவட்ட மக்களை நகர்த்தியுள்ளது எனக்கூறிக்கொள்ளலாம்,

*1950* களில் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் விளைவாக துரித இடப்பெயர்வு ஏற்பட்டுள்ளதனால் இக்காலப்பகுதிகளிலிருந்து தரவுகள் ரீதியாக நுணுக்கமாக ஆராய்வது சிறப்புடைத்து. இடப்பெயர்வின் அளவினை இருவழிகளில் பெற்றுக்கொள்ளமுடியும். I நேரடிமுறை II மறைமுகமுறை. நேரடிமுறையானது காலத்துக்குக் காலம் இடம்பெறும் குடித்தொகைக் கணிப்பு, குடித்தொகை இடாப்பு, குறிப்பின்றி மாதிரி கொள்ளல் என்பனவற்றின் வாயிலாக அறிந்து கொள்வதாகும். பிறந்த இடம், கணிப்பு நடைபெறும்போது அப்பிரதேசத்தில் வாழும் காலம், கணிப்புக்கு முன்னர் வாழ்ந்த இடம் போன்றவற்றினை அறிதல் மூலம் பெற்றுக்கொள்வதாகும். குடித்தொகைக் கணிப்பில் இடப்பெயர்வு சம்பந்தமான கேள்விகள் கேட்கப்படுவதுண்டு. பிறந்த இடம்பற்றிக் கேட்கும்முறை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் சிபாரிசு செய்யப்பட்ட வினாவாகவிருப்பதனால் எல்லா நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இலங்கையில் *1881* ஆம் ஆண்டுதவிர *1871 – 1981* வரை இடப்பெயர்வுக் கணிப்புகளில் இவ்வினா சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.20 இவைதவிர குடித்தொகை இடாப்பு, குறிப்பின்றி மாதிரிகொள்ளல் போன்றவற்றின் மூலமும் இடப்பெயர்வுக்கு விளக்கம் பெறமுடிந்தாலும் இலங்கையில் நடைமுறைக்குட்படுத்தப்படவில்லை. குடித்தொகை இடாப்பு என்பது ஒரு பிரதேசத்திலிருந்தோ அல்லது நாட்டிலிருந்தோ இடப்பெயர்வு மேற்கொள்ளும்போது குறிப்பிட்ட பகுதிகளில் வைத்து இடப்பெயர்வுக்கான நோக்கம், எப்பொழுது திரும்புவது போன்றன குறிக்கப்படுகின்றன. இம்முறைதான் மிகச் சிறப்பான வழி எனலாம். சுவீடன், கங்கோரி போன்ற நாடுகளில் இம்முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.21 குறிப்பின்றி மாதிரிகொள்ளல் முறை இலங்கையில் பெரியஅளவில் மேற்கொள்ளப்படுவதில்லை. மறை

முகவழியான வாழ்நிலேப் புள்ளிவிபரமுறை, உயர்வாழ்விதமுறை, இடப்பெயர்வுவீதம் (Migration Rate) போன்றவற்றின்மூலம் இடப்பெயர்வினே அறிந்துகொள்ளலாகும். இலங்கையில் பிறப்பு, இறப்புக்கள் பதிதல் நீண்டகாலமாக வழக்கிலிருந்துவருகின்றது. முதலாவது முறையின்மூலம் இடப்பெயர்வுபற்றி ஆராய்வது சிறப்பானதாகவிருக்கின்றது. எனவே இவ்வாய்வுக்கு நேரடியான முறையான பிறந்த இடமுறை, மறைமுகமுறையான வாழ்நிலேப்புள்ளி விபரமுறை ஆகிய இரண்டும் பயன்படுத்தப்பட்டு விளக்கம் கொடுக்கப்படுகின்றது. பிறந்த இடமுறையில் 1953–1981 வரையிலும், வாழ்நிலேப்புள்ளி விபரமுறையில் 1971 – 1981 வரையிலும் ஆராயப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் இடம்பெற்ற இடப்பெயர்வு 1963 – 1971 காலப்பகுதிகளில் ஆராயப்படுகின்றது. இவ்விடப்பெயர்வில் அண்மைக்காலத் தரவுகள் பெறமுடியாதுள்ளது.

### அட்டவணே II

பிறந்த இடம், யாழ்ப்பாண மாவட்டம் 1981
(10% மாதிரிக் கணிப்பு)

| | பிறப்பு | விதம் | ஆண் | விதம் | பெண் | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| மொத். குடித்தொகை | 831096 | 100·0 | 409823 | 100·0 | 421273 | 100·0 |
| தொடர்ச்சியாக மாவட்டத்தில் வாழ்பவர் | 823805 | 99·1 | 405850 | 99·0 | 417954 | 99·2 |
| மாவட்டத்தில் பிறந்தவர் | 794403 | 95·6 | 389589 | 95·0 | 404814 | 96·0 |
| வேறு மாவட்டங்களில் பிறந்தவர்கள் | 26268 | 3·1 | 14660 | 3·6 | 11607 | 2·8 |
| வெளிநாட்டில் பிறந்தவர்கள் | 3134 | 0·4 | 1601 | 0·4 | 1533 | 0·4 |
| தொடர்ச்சியாக இம் மாவட்டத்தில் வாழாதவர்கள் | 4770 | 0·6 | 2843 | 0·7 | 1927 | 0·5 |
| தொடர்ச்சியாக வாழ்வது பற்றி குறிப்பிடப்படாதவர்கள் | 2521 | 0·3 | 1129 | 0·3 | 1392 | 0·3 |

Source: Census of population and Housing, 1981. Population Tables (Based on a ten percent sample) Preliminary Release No 2.

அட்டவணே II ன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டுக் கணிப்பில் மாவட்டத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள் 96.0 வீதமாகும். வெளிமாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் மிகச்சிறிய தொகையினரே. இவ்வட்டவணேயில் இருந்து தெளிவாக அறியக்கூடியது யாதெனில் ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிகமாகவுள்ளனர். அதாவது ஆண்கள் வெளிமாவட்ட, வெளிநாட்டு இடப்பெயர்வில் கூடிய அக்கறை கொண்டிருத்தலாகும். பால்விகிதமானது 1871—1981 வரை, 1953—

*1963 ஆம் ஆண்டுக்குடித்தொகைக் கணிப்புக்கள்தவிர, ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிகமாக இருந்துள்ளனர். 1971, 1981 ஆண்டுகளில் முறையே 100 பெண்களுக்கு 98·3, 98·1 ஆண்களாகவிருந்தது. இலங்கைத் தமிழரிடையே 1946 ஆம் ஆண்டிலிருந்து ஆண்களின் விகிதம் படிப்படியாகக் குறைவடைந்துகொண்டு சென்றுள்ளது. 100 பெண்களுக்கு 1946, 1953, 1963, 1971, 1981ல் முறையே 99·8, 98·6, 98·3, 97·5, 97·3 ஆகவிருக்கின்றது. எனவே தமிழர்களில் ஆண்களின் இடப்பெயர்வு அதிகமாகவிருந்துள்ளது எனக்கூறலாம்.*

## அட்டவணை III

### யாழ்ப்பாண மாவட்டத்தின் தேறிய இடப்பெயர்வு 1953 - 1981

(பிறந்த இடமுறையில்)

| மாவட்டம் | 1953–63 | 1963–71 | 1971–81 |
|---|---|---|---|
| கொழும்பு, கம்பகா | — 3728 | — 29911 | — 18585 |
| | | | — 2958 |
| களுத்துறை | + 493 | — 30 | + 126 |
| கண்டி | + 548 | — 325 | + 4775 |
| மாத்தளை | + 462 | + 309 | + 1093 |
| நுவரெலியா | + 626 | + 78 | + 386 |
| காலி | + 182 | + 78 | + 121 |
| மாத்தறை | + 81 | + 424 | + 615 |
| அம்பாந்தோட்டை | — 92 | — 384 | — 31 |
| மன்னர் | — 1510 | — 2490 | — 6435 |
| வவுனியா, முல்லைத்திவு | — 5023 | — 13218 | — 10916 |
| | | | — 15920 |
| மட்டக்களப்பு, அம்பாறை | — 1497 | — 1390 | — 1298 |
| | | — 1516 | — 383 |
| திருகோணமலை | — 1697 | — 8523 | — 6390 |
| குருநாகல் | + 356 | — 1544 | — 554 |
| புத்தளம் | + 278 | — 890 | + 341 |
| அனுராத., பொலனறுவை | + 1992 | — 1007 | — 920 |
| | | — 157 | — 171 |
| பதுளை, மொனருகலை | + 1317 | — 1210 | + 466 |
| | | — 122 | — 166 |
| இரத்தினபுரி | + 279 | — 484 | — 211 |
| கேகாலை | + 454 | — 400 | + 1217 |
| உள்வரவின் எண்ணிக்கை | 6606 | 919 | 9140 |
| வெளி இடப்பெயர்வு | 13547 | 63571 | 64938 |
| தேறிய இடப்பெயர்வு | — 6941 | — 62652 | — 55798 |

*மூலம்: 1953, 1963, 1971, 1981 ஆண்டுக் குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து கணிக்கப்பட்டது.*

இம்மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கான இடப்பெயர்வினை முதலில் பிறந்த இடமுறையின்மூலம் அளவிடுவோம். *1953 – 1981*ஆம் ஆண்டுகளில் குடித்தொகையைப் பெறுவதிலும் பார்க்க இழப்பினையே பெற்றிருக்கின்றது. அட்டவணை III ன்படி *1953 - 1963*க் காலப்பகுதியில் உள்வரவு, வெளியேற்றம் முறையே *6606, 13547* ஆகும். அதாவது *– 6941* பேரை இக்காலப்பகுதியில் இம்மாவட்டம் இழந்திருக்கின்றது. இவ்விழப்பில் பெரும்பகுதி வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்குத்தான் சென்றுள்ளது. *1963 — 71* காலப்பகுதிகளில் *919* தேறிய உள் வரவுமட்டுமே ஏற்பட்டிருக்க *63571* தேறிய வெளியிடப்பெயர்வு நடைபெற்றுள்ளது. மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் இம் மாவட்டத்தின் இழப்பினைப் பெற்றிருக்கின்றது.

இவ்விருகாலப் பகுதிகளில் இம்மாவட்டம் இழந்ததொகை *–62652* ஆகும். *1971 – 1981* காலப்பகுதியில் தேறிய உள்வரவு *9140*ஆகவும் தேறிய வெளியேற்றம் *64938* ஆகவும் உள்ளது. தேறிய இடப்பெயர்வு *–55798* ஆகும். களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, புத்தளம், பதுளை, கேகாலை மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்கள் இம்மாவட்டத்தின் இழப்பினை வரவாகப் பெற்றுள்ளன. அதாவது இம் மூன்று காலப்பகுதிகளிலும் முக்கியமான அம்சம் யாதெனில் தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கு மாவட்டங்களும் கொழும்புமே இம்மாவட்ட மக்களைக் கவர்ந்துள்ளது எனலாம்.

இவ்வாறான தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்த போதிலும் *1971, 1981* ஆம் ஆண்டுக் கணிப்புகளில் சரியான தகவல்களைக் கொடுத்திருக்கின்றார்கள், இடப்பெயர்வினை ஏற்படுத்தியவர்களிடையே இறப்புகள் ஏற்படவில்லை என்ற எடுகோள்களை வைத்துப்பார்த்தால் *1981*ஆம் ஆண்டுக் கணிப்பில் உள் இடப்பெயர்வினையே ஏற்படுத்தியிருக்கின்றனர் எனக் கருதமுடிகின்றது. Lee யின் வாய்ப்பாட்டின்மூலம் இதனை அறிந்துகொள்ளலாம்.22

$$(I_2 — O_2) — (I_1 — O_1)$$
$$(919 — 63571) — (9140 — 64938)$$
$$— -62652 — -55798 — +6854$$

$I_1$ – உள்வரவு – *1971*
$I_2$ – வெளியேற்றம் – *1971*
$O_1$ – உள்வரவு – *1981*
$O_2$ – வெளியேற்றம் *1981*

*1971* இல் *– 62652* ஆகவும் *1981* இல் *– 55798* ஆகவும் தேறிய இடப்பெயர்வு உள்ளது. *1971* இல் பதியப்பட்ட தேறிய இடப்பெயர்வாளர்கள் *1981* லும் இருந்திருக்கவேண்டும் என்பதே இதன் சாராம்சமாகும். *1981* இல் குறைவான எண்ணிக்கை காணப்படுவதால் வெளியிடப்பெயர்விலும் பார்க்க உள்ளிடப்பெயர்வே ஏற்பட்டிருக்கவேண்டும் எனக்கருதலாம். இத்தகைய பண்பு தவறான தரவுகளைக் கொடுத்தல்மூலமும் ஏற்பட்டிருக்கலாம். அல்லது *1971* இன் பின் அரசியல், சமூகரீதியில் ஏற்பட்ட தாக்கங்கள் உள்ளிடப்பெயர்வை ஏற்படுத்தியிருக்கலாம்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வெளிமாவட்டங்களில் வாழ்பவர்களில் 63.7 வீதமானோர் வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் வாழ்கின்றனர். கொழும்பு, கம்பகா மாவட்டங்களில்

33.2 வீதத்தினர் உளர். அதாவது 97 வீதத்தினர் மேற்கூறப்பட்ட மாவட்டங்களுக்கே சென்றுள்ளனர்.

அட்டவணை III இன்படி இம்மாவட்டத்தில் பிறந்த ஆனல் வெளி மாவட்டத்தில் வாழ்வோரிடையே பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகமாகவுள்ளனர். 1981 தரவின்படி 63.3 வீதத்தினர் ஆண்களாக வும், 36.7 வீதத்தினர் பெண்களாகவும் இருப்பதைக் காணலாம். அதே வேளை வெளி மாவட்டங்களிலிருந்து உள்வரவை ஏற்படுத்தியோரில் 52.7 வீதத்தினர் ஆண்களாகவும் 47.3 வீதத்தினர் பெண்களாகவும் உள்ளனர். இவ்விரு இடப்பெயர்வுகளும் தொழில்வாய்ப்பு, வர்த்தகம் போன்றவற் றிற்கே இடம் பெயர்ந்துள்ளனர் என்ற முடிவுக்கு வரலாம். கொழும்பு மாவட்டத்துக்கு சென்ருேரில் 68.2 வீதத்தினர் ஆண்களாகவும் 31.8 வீதத்திவர் பெண்களாகவும் உள்ளனர். வடக்கு, கிழக்கு மாவட்டங் களில் ஆண்கள், பெண்கள் முறையே 59·4, 40·6 வீதங்களாக உள்ளனர். இம்மாவட்டங்களுக்குச் சென்றவர்களில் பெரும்பான்மையானேர் நிரந்தர மாகவே அங்கு குடியேறியுள்ளனர்.

## அட்டவணை IV

### யாழ்ப்பாண மாவட்டத்தின் தேறிய இடப்பெயர்வு 1981

**ஆண்கள், பெண்கள்.**

| மாவட்டம் | ஆண்களின் தே. இ. பெயர்வு | பெண்களின் தே. இ. பெயர்வு |
|---|---|---|
| கொழும்பு | — 12674 | — 5911 |
| கம்பகா | — 1835 | — 1122 |
| களுத்துறை | + 41 | + 84 |
| கண்டி | + 2604 | + 2172 |
| மாத்தளை | + 396 | + 692 |
| நுவரெலியா | + 85 | + 301 |
| காலி | + 91 | + 30 |
| மாத்தறை | + 435 | + 186 |
| அம்பாந்தோட்டை | — 36 | + 5 |
| மன்னர் | — 3952 | + 2393 |
| வவுனியா | — 6584 | — 4333 |
| முல்லைத்தீவு | — 9197 | — 6521 |
| மட்டக்களப்பு | — 583 | — 715 |
| அம்பாறை | — 252 | — 129 |
| திருகோணமலை | — 3827 | — 2563 |
| குருநாகல் | — 515 | — 38 |
| புத்தளம் | — 248 | + 98 |
| அனுராதபுரம் | — 1128 | + 208 |
| பொலனறுவை | — 149 | — 23 |
| பதுளை | + 320 | + 146 |
| மொனருகலை | — 146 | — 20 |
| இரத்தினபுரி | — 207 | — 4 |
| கேகாலை | + 711 | + 505 |

மூலம்; குடித்தொகைக் கணிப்பு அறிக்கை 1981, வெளியீடு 9லிருந்து கணிக்கப்பட்டது.

மறைமுக முறையான வாழ்நிலைப் புள்ளிவிபரமுறையில் இம்மாவட்டத்தின் தேறிய இடப்பெயர்வு 1971 – 1981 ஆம் ஆண்டுகளிடையில் கணிக்கப்படுகின்றது. இதனைப் பின்வரும் முறையில் காணலாம்.[23]

$$\text{Net } M = (Pt + n) - Pt\ (B - D)$$

1. யாழ். மாவட்டத்தின் குடித்தொகை 1971 = Pt = 704350
2. யாழ். மாவட்டத்தின் குடித்தொகை 1981 = Pt + 1 = 831112
3. குடித்தொகை அதிகரிப்பு 1971 – 1981 (2) – (1) = 126762
4. மாவட்டத்தின் பிறப்பின் எண்ணிக்கை = B = 223484*
5. மாவட்டத்தின் இறப்பின் எண்ணிக்கை = D = 49971*
6. மாவட்டத்தின் இயற்கை அதிகரிப்பு = (4) – (5) = 193513
7. தேறிய இடப்பெயர்வு = (3) – (6) = – 46751

எனவே 1971 – 1981 ஆம் ஆண்டுகளில் இம்மாவட்டத்தின் தேறிய இடப்பெயர்வு — 46751 ஆகவும் பிறந்த இட அளவைமுறையில் — 55778 ஆகவும் உள்ளது. இவ் விடுமுறைகளிலும் வேறுபாடு காணப்படுவது தவிர்க்க முடியாதது. குடித்தொகை இடாப்புமுறை பின்பற்றப்படாவிடில் இத்தகைய வேறுபாட்டினைக் காணவேண்டியிருக்கும்.

மேற்கூறப்பட்ட இரு முறைகளிலும் உள், வெளி இடப்பெயர்வுகள் பெறப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் உள்மாவட்ட இடப்பெயர்வுபற்றி அறிதல் மிகவும் அவசியமாகின்றது. இங்கு வாழ்நிலைப்புள்ளி விபர முறையின் மூலம் 1963 – 1971 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வு கணிக்கப்படுகின்றது.

## அட்டவணை V

**வாழ்நிலைப் புள்ளி விபர முறையினைக்கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் தேறிய இடப்பெயர்வு — 1963 – 1971**

| உ. அ. அ. பிரிவு | 1963–1971க்கு இடைப்பட்ட காலத்தில் குடித் தொகைமாற்றம் | பிறப்பு | இறப்பு | தேறிய இடப்பெயர்வு |
|---|---|---|---|---|
| நெடுந்தீவு | — 338 | 1534 | 388 | — 1484 |
| தீவுப்பகுதி | 6624 | 14307 | 5185 | — 2498 |
| யாழ்ப்பாணம் | 4100 | 1152 | 1412 | + 4360 |
| வலிகாமம் மேற்கு | 8121 | 20645 | 6480 | — 6044 |
| வலிகாமம் வடக்கு | 13642 | 24171 | 5347 | — 5182 |
| வலிகாமம் கிழக்கு | 8351 | 8762 | 3208 | — 2797 |
| தென்மராட்சி | 7395 | 9926 | 4687 | + 2156 |
| வடமராட்சி | 8924 | 20821 | 6859 | — 5028 |
| பச்சிலைப்பள்ளி | 2528 | 4148 | 879 | — 741 |
| கரைச்சி–துணுக்காய் | 16265 | 7706 | 1224 | + 9783 |
| பூநகரி | 924 | 2116 | 602 | — 590 |
| யாழ்ப்பாணநகரம் | 12514 | 57135 | 10369 | — 34252 |

மூலம்:– குடித்தொகைக் கணிப்புகள், பதிவாளர்நாயகத்தின் அறிக்கைகளிலிருந்து கணிக்கப்பட்டுள்ளது.

*பிறப்புக்களும், இறப்புக்களும் குடித்தொகைக் கணிப்புக்கள் பெறப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளன.

இக் கணிப்பீட்டின்படி யாழ்ப்பாண உதவி அரசபிரிவு, வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி, கரைச்சி, துணுக்காய் என்பன உள்வரவினைப் பெற்றிருக்கின்றன. ஏனைய பிரிவுகள் குடித்தொகை இழப்புப் பெற்றுள்ளன. கரைச்சி, துணுக்காய் பகுதி விவசாயத்தில் விருத்தி பெற்றுவருகின்ற பகுதியானபடியால் அப்பிரதேசம் இழுவிசையைக் கொண்டதாயிருக்கின்றது. யாழ்ப்பாண உதவி அரசபிரிவு ஏனைய பிரிவு மக்களைக்கவரும் பகுதியாக விளங்குகின்றது. இழப்பைப் பொறுத்தவரை யாழநகரம், வடமராட்சி, வலிமேற்கு, வடக்கு, தீவுப்பகுதி போன்ற பிரிவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. யாழ்நகரில் உண்மையான இழப்பு – 34254 ஆக இருக்கமுடியாது. ஏனெனில் மருத்துவ சுகாதார வசதிகள் இப்பிரதேசத்தில் அமைந்திருப்பதால் ஏனைய பிரிவுகளில் உள்ளவர்களின், குறிப்பிடத்தக்க பிறப்புக்கள் இப்பிரிவில் சம்பவிக்கின்றன. அவர்களது இறப்புக்களும் ஓரளவுக்கு இடம்பெறுகின்றன. பொதுவாக மாவட்டத்துக்குள் இடம்பெற்றுவரும் இடப்பெயர்வுக்கு பௌதிக பண்பாட்டுக் காரணிகளே முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக நீர் பற்றுக்குறை பல இடங்களில் இடப்பெயர்வைத் தூண்டும் காரணியாக விருக்கின்றது.

இறுதியாக, யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகை 1871 – 1953 வரையுள்ள 82 வருடங்களில் இரட்டிப்பாகியுள்ளது. அதேபோல 1946 – 1981 வரையுள்ள 35 வருடங்களில் ஏறத்தாழ இரட்டிப்பு நிலையை அடைந்திருக்கின்றது. இந்நிலையில் 30 வருடங்களில் என்னுமொரு இரட்டிப்பினை ஏற்படுத்திவிடும். மனிதநில விகிதம் பாரதூரமான பாதிப்பினை இம்மாவட்டத்தில் ஏற்படுத்தலாம். எனவே வெளிமாவட்ட இடப்பெயர்வினை மேற்கொள்ளல் தவிர்க்கமுடியாமல் அதிகரித்துச்செல்லும் எனலாம். இம்மாவட்டம் இழுவிசையை ஏற்படுத்தமுடியாது. தள்ளுவிசையையே ஏற்படுத்தும். ஏனெனில் சமூகரீதியாக 90 வீதத்துக்குமதிகமானோர் இலங்கைத் தமிழர்களாகவிருப்பது, குடிச்செறிவு அதிகமான ஈரலிப்புவலைய மாவட்டங்களிலிருந்து அதிக தூரத்தில் அமைந்துள்ளமை, வர்த்தக நடவடிக்கையில் இம்மாவட்டத்தினரே ஏகபோக உரிமை கொண்டிருத்தல், வெளிமாவட்டங்களின் இடமாற்ற விடயத்தில் அரச ஊழியர்கள் யாழ்ப்பாணத்தைவிட ஏனைய மாவட்டங்களை அதிகம் விரும்புதல் அண்மைக்கால அரசியல் போக்கு ஆகியன இழுவிசையைக் கட்டுப்படுத்தும் காரணிகளாக உள்ளன. தள்ளுவிசையைப் பொறுத்தவரை பல்வேறு சமூக, பொருளாதார, கலாசாரப் பண்புகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. இம்மாவட்டத்தின் குடித்தொகையில் 92·6 வீதமானோர் குடாநாட்டுப் பகுதிகளிலும் 7·4 வீதமானோர் தாய்நிலப்பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். நிலப்பரப்பினைப் பொறுத்தவரை இவ்விருபகுதிகளும் ஏறத்தாழ ஒரே அளவானவையாகும். 1901 ஆம் ஆண்டுக் கணிப்பின்படி மாவட்டத்தின் தலைக்குரிய நிலப்பரப்பு 2·2 ஏக்கராகும். இத்தொகை 1980 இல் 0·007 ஏக்கராக குறைவடைந்துவிட்டது.[24] அதாவது விவசாயநிலம் குடியிருப்புநிலங்களாக மாற்றப்படுகின்றமை, இதனால் விவசாய நடவடிக்கைகளை கைவிட வேண்டியுள்ளமையால் வேலையற்ற வர்க்கம் அதிகரித்துவரும் நிலைமை, காணப்படும் நிலங்களும் சீதன வழக்குமுறையால் சிறுசிறு துண்டுகளாக்கப் பட்டுக்கொண்டு செல்லும் பண்பு ஆகியவற்றால் எதிர்கால யாழ்மாவட்ட மக்களினால் நிலப்பற்றுக்குறையைச் சமாளித்துக் கொள்வது மிகச் சிரம

மாகவேயிருக்கும். இதற்கு ஒரேவழி வெளிமாவட்டங்களுக்கு தொடர்ச்சியான இடப்பெயர்வினை மேற்கொண்டு வருதலாகும். வெளிமாவட்டங்களில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்குச் செல்வதையே தற்போதைய சூழ்நிலையில் விரும்பவேண்டும். கொழும்புதவிர்ந்த ஏனைய சிங்களமக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களுக்கான கவர்ச்சி படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. மேலும் இம்மாவட்ட மக்கள் ''கல்வியை ஒரு மூலவளமாக'' கருதக்கூடிய அளவுக்கு அதிக நாட்டம் கொண்டுள்ளனர். இதனால் தொழில் வாய்ப்பினைப் பொறுத்தவரை ''White Collar'' உத்தியோகத்தையே விரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுவருவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. காரணம் பெருமளவு விவசாயக் குடும்பங்கள் விவசாயத்தைக் கைவிட்டு வருவதாலும் அதற்குரிய பயிற்சிகளை நடைமுறையில் மேற்கொள்ளாமையுமேயாகும். தாய்நிலப்பகுதிகளில் குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் இன்றியமையாதுள்ளது. இம்மாவட்டத்தின் இயற்கை வளங்களும் குறைவடைந்துகொண்டு செல்வதும் எதிர்காலத்தில் பாரிய பிரச்சனைகளைத் தோற்றுவிக்கலாம். உதாரணமாக உவர்த் தன்மையற்ற நீரினை வருடத்தின் பெரும்பகுதிகளில் பல இடங்களில் பெறுவது கடினமாயுள்ளது

உள்மாவட்ட இடப்பெயர்வினைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண நகரத்திற்கு தீவுப்பகுதி, வடமராட்சி போன்ற இடங்களிலிருந்து வந்து குடியேறுகின்றனர். இதனால் நகரத்தில் நிலப்பற்றுக்குறை ஏற்பட்டு வருகின்றது. அவ்வப்பிரதேச பௌதிக பண்பாட்டுக் காரணிகள் அவர்களோடு ஒத்துப் போகாதபடியாலேயே வெளியேறுகின்றனர். வெளியேறுவோர்களில் பொருளாதார ரீதியில் வலிமை கொண்டவர்களாக விருப்பது குறிப்பிடத்தக்கது. பொருளியல் ரீதியில் வலிமை குறைந்தவர்கள் இடப்பெயர்வில் அக்கறை செலுத்த முடியாதிருக்கின்றது. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகைப் பிரச்சனைகளைத் தீர்க்க மீளப்பரம்பலுக்கான திட்டங்களை சிறப்பாக அரசாங்க மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் மேற்கொள்வதுடன் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குரிய குடும்பத்திட்டமிடலிலும் அக்கறை செலுத்துவது இன்றியமையாததாகும்.

## சான்றுதாரம்


1. *1977 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டபின்னர் இம்மாவட்டத்தின் பரப்பளவு 816 சதுரமைலாகும். துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பெரும்பகுதி முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் சேர்க்கப்பட்டுள்ளது.*

2. குகபாலன், கா; **யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகை இயக்கம்,** *முதுமாணி ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது (வெளியிடப்படாதது) 1979 பக். 7–8*

3. *1931 ஆம் ஆண்டின்பின்னர் மூன்று கணிப்புக்கள் (1946, 1953, 1963) பல்வேறு காரணங்களால் எடுக்கப்படவேண்டிய ஆண்டுக் காலங்களில் நடைபெறவில்லை.*


4. Agarwala. S. N., India's Population Problesm, New Delhi. Mcgraw Hill 1977. pp. 50 - 52

5. **Bhende and Kenitkar' Principles of population studies, Himalayan publishing House, Delhi. 1981 P. P 231-235**

6. William. T. Couch, (Ed) Collier's Encyclopedia, Vol. 16, pp. 208 - 209

7. Cox. R. Peter. Demography, Cambridge University Press 1959. pp. 167 - 75

8. Beijer. G., "Demographic, Social and Economic aspects of Internal Migration in Some Europian Countries" United Nations world Population Congress, Belgrade 1965.

9. *இராசநாயகம். செ., யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம், ஸ்ரீ சண்முகநாதன் பதிப்பகம். 1933. பக்-4*

10. செல்வநாயகம். சோ., ''இலங்கையின் பயிர்ச்செய்கை விருத்தி பற்றிய சில பிரச்சனைகள்'' **சிந்தனை.** *மலர் 3, இதழ் 1, ஜனவரி 1970 பக். 36 – 39*

11. இந்திரபாலா. கா., *''யாழ்ப்பாணநகரம்''* **எழில்மிகு யாழ்ப்பாணம்**

12. *இராசநாயகம். செ., மு. நூ. பக். 214.*

13. *முன்காட்டிய நூல் பக். 202*

14. மென்டிஸ். ஜி. சி., **இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி,** கொழும்பு, *1960. பக். 165–170*

15. Sandhu. K. S., **Indians in Malaya,** Cambridge University Press, 1969, p. 52.

16. Department of Census and Statistics, **Census of Ceylon 1931,** Vol. I. Colombo 1932. p. 75.

17. *ஈழகேசரி,* ஆடி 25, 1937, *பக்.* 7.

18. Gavin W. Jones & Selvaratnam. S., Population Growth and Economic Development in Ceylon. Colombo. Hansa publication Ltd, 1972 pp. 19 - 25

19. Wikrama Weerasooria. Population Redistribution Policies and measures in Sri Lanka. Colombo. Ministry of Plan Implementation, 1980, pp. 3 - 9

20. Department of Census and Statistics, Census of Population, 1971, General Report, Colombo. 1978, p. 6.

21. Asha A. Bhende, and Tara Kanitkar; **Principles of Population Studies**, Bombay. Himalaya publishing House, 1982 pp. 305–307.

22. Lee E.S and Lee Anne, S., "Internal Migration Statistics for the United States" Journal of the American Statistical Association, 55. Dec. 1960, pp. 664 - 97.

23. Department of Economic and Social Affairs; **Methods of Measuring Internal Migration, Manuals on Methods of estinating Population; Manual VI, Population Studies No. 47.** United Nations, New York 1970. p 24.

24. Nimali Kannangara, **Jaffna District** Family Planning Association of Sri Lanka, Colombo, 1980. p. 7.